# புதுச்சேரி காந்தி திடலில் கோடை விழா





புதுச்சேரி கடற்கரை காந்தி திடலில் கோடை விழாவை சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் லட்சுமி நாராயணன், சந்திரபிரியங்கா ஆகியோர் மணியடித்து தொடங்கி வைத்தனர். அடுத்தபடம்: கோடை விழாவில் பார்வையாளர்களை கவர்ந்த பரதநாட்டியம்.

## சபாநாயகர், அமைச்சர்கள் துவக்கி வைத்தனர்

புதுச்சேரி, ஜூன் 3: புதுச்சேரி அரசின் கலை பண்பாட்டுத்துறையும், தஞ்சை தென்னக பண்பாட்டு மையமும் இணைந்து நடத்தும் கோடை விழா நேற்று துவங்கியது. புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி திடலில் நேற்று மாலை இதன் துவக்க விழா நடைபெற்றது. சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் லட்சுமிநாராயணன், சந்திரபிரியங்கா ஆகியோர் மணியடித்து விழாவை துவக்கி வைத்தனர். கலை பண்பாட்டுத்துறை செயலர் நெடுஞ்செழியன், துறை இயக்குநர் கந்தன் (எ) சிவராசன், உதவி நூலக தகவல் அதிகாரி சம்பந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விழாவில் சபாநாயகர் செல்வம் பேசும் போது, கடந்த 2 ஆண்டுகளாக இருண்டு கிடந்த புதுச்சேரி இப்போது ஒளிர்ந்து வருகிறது. வளமிக்க புதுச்சேரியாக இப்போது மாறி வருகிறது. நகரம், கிராமம் என புதுச்சேரி முழுவதும் சாலை பணிகள் நடந்து வருகிறது. கடலூர் மாவட்டத்தையொட்டி உள்ள பெண்ணையாற்றில் இருந்து தண்ணீரை எடுத்து புதுச்சேரி முழுவதும் குடிநீர் வினியோகிக்க ரூ.500 கோடியில் திட்டமிடப்பட்டுள்ளது. புதுச்சேரியில் உள்ள அனைத்து மக்களுக்கும் சுத்தமான குடிநீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கையை அரசு எடுத்துள்ளது. மாதத்துக்கு 20 நாட்கள் இதுபோன்ற விழாக்கள் நடத்தப்பட்டு வருகிறது. மக்களுக்கு பொழுதுபோக்கு மட்டுமின்றி கலைகளை வளர்க்கும் நோக்கிலும் இவ்விழா நடத்தப்படுகிறது என்றார்.

அமைச்சர் லட்சுமிநாராயணன் பேசுகையில், தங்களது திறமைகளை மேம்படுத்தி மெருகேற்ற இதுபோன்ற விழாக்கள் கலைஞர்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே, இந்த நல்ல வாய்ப்பை சரியான முறையில் கலைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கலை பண்பாட்டுத்துறையும், சுற்றுலாத்துறையும் இணைந்து எதிர்காலத்தில் இதுபோல் பல்வேறு விழாக்களை நடத்த இருக்கிறோம். மக்கள் ரசிப்பதற்கு மட்டுமின்றி கலைகளை மென்மேலும் வளர்ப்பதற்கு இவ்விழா நடத்தப்படுகிறது என்றார். விழாவை கடற்கரைக்கு சுற்றுலா வந்த பயணிகள், பொதுமக்கள் ஏராளமானோர் பார்த்து ரசித்தனர்.

கோடை விழா வரும் 5ம் தேதி வரை தினமும் மாலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை நடக்கிறது. முதல் நாளான நேற்று, மங்கல இசை, பரதநாட்டியம், காளியாட்டம், நாட்டுப்புற இசை நடைபெற்றது. இன்று (3ம் தேதி) மாலை பொம்மலாட்டம், நாட்டுப்புற நடனம், சிலம்பாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகமும், நாளை (4ம் தேதி) வில்லுப்பாட்டு, பரதநாட்டியம், பம்பை உடுக்கை, மெல்லிசையும், 5ம் தேதி நாத சங்கமம், நாட்டுப்புற நடனம், சிவன் பார்வதி நடனம், மெல்லிசையும் நடைபெறுகிறது.